கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014
(2017 **June**)

**GYS-4123** அரசியற் புவியியல் *நேரம்: 3 மணித்தியாலங்கள்*

*யாதாயினும் நான்கு (4) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.*

---

1. ."அரசியற் புவியியல் கற்கையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாக காணப்படும் நிலக் கோட்பாடுகள் காலத்தால் பிந்திய கோட்பாடுகளாகக் காணப்பட்டாலும் தற்கால அரசியலில் அவற்றின் பிரயோகத்தன்மையை குறைத்து மதிப்பிட முடியாது" இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் தந்து விளக்குக. (25 புள்ளிகள்)

2. அ. சேதுசமுத்திரத்திட்டத்தின் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தினை தற்கால உலக அரசியல் நிலைமைகளுடன் தொடர்பு படுத்தி விமர்சன ரீதியாக ஆராய்க (15 புள்ளிகள்)

   ஆ. இத் திட்டத்தின் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக இலங்கை எதிர்கொள்ளும் சாதக மற்றும் பாதகத் தன்மைகளை விளக்குக (10 புள்ளிகள்)

3. இன்றய உலகின் முனைப்பான புவிசார் அரசியல் ஒழுங்கை ஆராய்ந்து இது முன்னய உலக கட்டமைப்புக்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை ஆராய்க. (25புள்ளிகள்)

4. ஒற்றையாட்சி, கூட்டாட்சி, தேசியம் சார் அரசு, அரசில்லா தேசிய இனங்கள் பற்றி நீர் விளங்கிக் கொள்வது யாது? உதாரணங்களுடன் விளக்குக.(25 புள்ளிகள்)

5. ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டத்தின் கீழ் கடற்கரையைக் கொண்டமைந்த இறையான அரசுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை ஆராய்க. .(25 புள்ளிகள்)

6. எல்லைப்பகுதிகளினதும் எல்லைகளினதும் வேறுபாடுகளை ஆராய்ந்து நாடுகளிடையேயும் நாடுகளுக்குள்ளும் எல்லைகளை வரையறை செய்ய தற்பொழுது பயன்படுத்தப்படும் காரணிகளின் குறை நிறைகளை ஆராய்க. (25 புள்ளிகள்)